<u>சார்பு நீதிமன்றம். துறையூர்</u>

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக்,M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் நாள் செவ்வாய்கிழமை**

**<u>இடைநிலை மனு எண்.4/2024 இன் அசல் வழக்கு எண்.99/2022</u>**

1. அருட்செல்வி
2. அன்புசெல்வி
3. காந்தி
4. அருள்மணி (எ) அருள்மொழி

... மனுதாரர்/
பிரதிவாதி

/எதிராக/

செந்தில்வடிவு

... எதிர்மனுதாரர்/
வாதி

இம்மனு இறுதியாக என் முன்பு கடந்த 06.10.2025 -ம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. தனசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V. ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

மாரியாயியின் சட்டப்படியான வாரிசுகளை வழக்கில் சேர்க்காத நபர்களை சேர்க்க உத்தரவிட்டும் பூங்கோதை 28.03.1990-ம் தேதி பிச்சை, ராஜவேல், ராமகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த ஆவண எண்.343/1990-ல் உள்ள சொத்துக்களும் எதிர்மனுதாரரின் கணவர் தமிழ்ச்செல்வன் சேனப்பநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து இறந்துவிட்டதால் அவருக்கு சேர வேண்டிய இறப்பு பணபலன்கள் மற்றும் சிறுநாவலூர் கிராமத்தில் பழனியாண்டிக்கு சொந்தமான 1722 சதுரஅடி உள்ள RCC கெட்டி மேத்தை வீடும் வழக்கில் சேர்க்க உத்தரவிட கோரி உ.வி.மு.ச கட்டளை 1 விதி 10(2)-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**மனுதாரர்களின் மனுசுருக்கம்**</u>

(2.1)மனுதாரர் வழக்கில் 2-ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர், மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து மாரிமுத்துவுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் ஆகும். மாரிமுத்து அவரின் ஆண் வாரிசான பழனியாண்டிக்கும், முத்துசாமிக்கும் பாகம் பிரித்து கொடுத்துவிட்டார். மேற்படி வழக்கில் மாரிமுத்துவுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் பாகம் பிரிக்க எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால் மாரிமுத்துவின் வாரிசான மாரியாயி என்பவரை வாரிசாக காட்டாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவரது கணவர் அமாவாசைக்கு பிறந்தவர்கள் முத்துசாமி, ஆண்டி, கமலம் ஆவார்கள். மேற்படி மாரியாயியும், அமாவாசையும் இறந்துவிட்டார்கள். மாரியாயின் மகன் முத்துசாமியும் இறந்துவிட்டார். முத்துசாமி கமலத்திற்கு திருமயில், பழனிசாமி, சரவணன் ஆகியவர்கள் வாரிசுகள் ஆவார்கள். திருமயிலும் இறந்துவிட்டார். மேற்படி திருமயில் மனைவி சூர்யா, அவரது வாரிசுகள் மகாலட்சுமி, சங்கவி, கிருஷ்ணன் ஆவர்கள். வாரிசுகளான முத்துசாமிக்கு கமலம்-1, திருமயில் மனைவி சூர்யா- 2, திருமயில்-சூர்யா வாரிசுகள் மகாலட்சுமி-3, சங்கவி-4, கிருஷ்ணன்-5, ஆகியோர்களும் திருமயிலுடன் பிறந்தவர்களான பழனிச்சாமி-6, சரவணன்-7, மாரியாயி-அமாவாசையின் வாரிசுகளான ஆண்டி-8, கமலம்-9, ஆகியோர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. அதாவது வாதியின் பாகப்பிரிவினை வழக்கில் 9 நபர்களை மாரியாயியின் வாரிசுகளை வழக்கில் விடுபட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

(2.2)பழனியாண்டி மனைவி பூங்கோதை 28.03.1990-ம் தேதி பிச்சை, ராஜவேல், ராமகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த ஆவண எண்.343/1990 இல் உள்ள சொத்துக்களும் வாதியின் கணவர் தமிழ்ச்செல்வன் சேனப்பநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து இறந்துவிட்டதால் அவருக்கு சேரவேண்டிய இறப்பு பணபலன்கள் மற்றும் சிறுநாவலூர் கிராமத்தில் பழனியாண்டிக்கு சொந்தமான 1722 சதுர அடி உள்ள RCC கெட்டி மெத்தை வீடு ஆகிய சொத்துக்கள் வழக்கில் சேர்க்கப்படாமல் பாகம் பிரிக்க எதிர்மனுதாரர் சொத்துக்களை வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மாரியாயியின் வாரிசுகளை சேர்க்காத நபர்களை சேர்க்க உத்தரவிட்டும் பூங்கோதை 28.03.1990-ம் தேதி பிச்சை, ராஜவேல், ராமகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு கிரயம் செய்து கொடுத்த ஆவண எண்.343/1990 இல் உள்ள சொத்துக்களும் வாதியின் கணவர் தமிழ்ச்செல்வன் சேனப்பநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து இறந்து விட்டதால் அவருக்கு சேர வேண்டிய இறப்பு பணபலன்கள் மற்றும் சிறுநாவலூர் கிராமத்தில் பழனியாண்டிக்கு சொந்தமான 1722 சதுரஅடி உள்ள RCC கெட்டி மேத்தை வீடும் வழக்கில் சேர்க்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரின் பதிலுரை சுருக்கம்:-</u>**

(3.1)மனுமோசடி மனுப்படி மனுதாரருக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. இவ்வழக்கு பாக வழக்கு என்பது உண்மை. இவ்வழக்கில் வாதி தரப்பில் 05.10.2023 ஆம் தேதி அவரது சத்யபிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். அதன் பிறகு மனுதாரர்கள் இவ்வழக்கை மக்கள் நீதிமன்றத்திற்கு அனுப்ப கோரிக்கை வைத்ததில் அங்கு சமரசம் பேசப்பட்டு பூசல் தீர்க்கப்படவில்லை. எனவே வழக்கு நீதிமன்றத்திற்கு மேல் நடவடிக்கைக்கு வந்ததில் 18.01.2024 ஆம் தேதி வாதியை முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. வாதி தரப்பில் வேறு சாட்சி இல்லை என்று கூறியதன் அடிப்படையில் பிரதிவாதி தரப்பு சாட்சியமளிக்க 05.02.2024 ஆம் தேதி வாய்தா வைக்கப்பட்டது. 12.02.2024 ஆம் தேதி பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சி விசாரிக்கப்பட்டு, 26.02.2024 ஆம் தேதி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில் 2 வது சாட்சி 19.04.2024 ஆம் தேதி விசாரிக்கப்பட்டார். குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாதால் பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பின்னர் சாட்சியை ரீக்கால் செய்ய மனு கொடுக்கப்பட்டு அதன் பிறகு பிரதிவாதி தரப்பு 2 வது சாட்சி, 3 வது சாட்சி விசாரிக்கப்பட்டார்கள்.

(3.2)பதிவுத்துறையிலிருந்தும், கல்வித்துறையிலிருந்தும், உள்ளாட்சித் துறையிலிருந்தும் ஆவணங்களை தருவிக்க வேண்டும் என மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அம்மனுக்கள் தகுதியின் அடிப்படையில் 24.09.2024-ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு அபிடவிட்டில் 5 வது பாராவில் மாரிமுத்து உயிருடன் இருக்கும்போதே அவருடைய ஆண் வாரிசுகளான பழனியாண்டிக்கும், முத்துசாமிக்கும் பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்துக் கொடுத்துவிட்டார் என வாக்குமூலத்திலேயே கூறியுள்ளார். பின்னர் மாரிமுத்துவின் மகள் மாரியாயின் வாரிசுகளை வழக்கில் சேர்க்க வேண்டும் என்று பிரதிவாதிகள் கோரிக்கை வைத்திருப்பது சட்ட ஏற்புடையதல்ல. மாரிமுத்து உயிருடன் இருக்கும் போது அவரது மகன்களுக்கு வெகு காலத்திற்கு முன்பே பாகம் பிரித்து கொடுத்திருக்கும் நிலையில் மகள் மாரியாயிக்கே பாகம் கேட்க உரிமை இல்லை. எனவே அவரது வாரிசுகளும் பாகம் கேட்க உரிமை இல்லை. இவ்வழக்கில் மாரிமுத்துவின் சொத்துகளில் பாகம் வேண்டும் என வழக்கு தொடரப்படவில்லை. மாரிமுத்துவின் மகன்களான பழனியாண்டி மற்றும் முத்துசாமியும் அனுபவ நிலங்களில் தான் பாகம் கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே மாரியாயியின் மகன் இவ்வழகிற்கு அவசியமான தரப்பினர் அல்ல. இவ்வழக்கு 2022 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பழனியாண்டி மனைவி பூங்கோதை என்பவர் 32 வருடங்களுக்கு முன்பு 28.03.1990 ஆம் தேதி பிச்சை, ராஜவேல், ராமகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்க வேண்டும் என கூறுவது சட்ட ஏற்புடையதல்ல. பூங்கோதை என்ற பெண்மணி பெயரில்

உள்ள சொத்து அவரது சொத்தாகும். அவர் அதனை வேற்று நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்திருக்கும் போது அச்சொத்துக்களை வழக்கில் சேர்க்க வேண்டும் என கோருவது சட்ட ஏற்புடையதல்ல. குறிப்பாக மேற்படி பூங்கோதை அவர் கணவர் பழனியாண்டிக்கு முன்பே இறந்துவிட்டார். வாதியின் கணவர் சேனப்பநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் கிளார்க்காக பணிபுரிந்து பணியில் இருக்கும்போதே இறந்துவிட்டார்.

(3.3)1-ம் பிரதிவாதி அரசுதுறை பணப்பயன்களை வாதி அடைந்துகொள்ள ஆட்சேபனை செய்து வருகிறார். எனவே, கல்வித்துறைக்கு இழப்பீட்டு தொகைக்காக முறையான நடவடிக்கைகள் வாதியால் எடுக்கப்பட முடியவில்லை. எனவே கல்வித்துறை இழப்பீட்டுத் தொகைகளை நிர்யணம் செய்யாமல் இருந்து வருகிறது. மேறப்டி இழப்பீட்டுத்தொகையில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எவ்வித பங்குரிமையில்லை. வழக்குரை 17 வது பாராவில் வாதி மேற்படி உரிமையை தக்க வைத்து கொண்டிருக்கும்போது அவருக்கு சேர வேண்டிய பணப்பயன்களை இவ்வழக்கில் சேர்க்க வேண்டும் என கூறியிருப்பது சட்ட ஏற்புடையதல்ல. பழனியாண்டிக்கு சொந்தமான 1722 சதுரடியில் கெட்டி மெத்தை வீடு இருந்ததாக கூறிவிட்டு அச்சொத்தின் சர்வே எண்கள் ஏதும் கூறாமல், நான்கெல்லைகள் ஏதும் கூறாமல் அதனை இவ்வழக்கில் சேர்க்க வேண்டும் என இம்மனு கொடுத்திருப்பது ஏற்புடையதல்ல. இவ்வழக்கில் விசாரணை முடிவுற்று விவாதத்திற்கு ஒதுக்க வேண்டி வழக்கு இருக்கின்ற நிலையில் இம்மனு கொடுத்திருப்பது சற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

4.இருதரப்பு மனுக்கள், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**<u>தீர்வு..</u>**

(5.1)இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்குச்சொத்துக்கள் மாரிமுத்துவுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் எனவும், மாரிமுத்துவின் ஆண் வாரிசுகளான பழனியாண்டி மற்றும் முத்துசாமிக்கு பாகம் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது எனவும், ஆனால் மாரிமுத்துவின் மகள் மாரியாயி என்பவரை இவ்வழக்கில் காட்டாமல் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மாரியாயி இறந்து அவருக்கு வாரிசுகளாக உத்தேச தரப்பினர்கள் உள்ளார்கள் எனவும், இந்த வழக்கில் வாதி பழனியாண்டிக்கு சொந்தமான வீட்டினை காட்டவில்லை எனவும், வாதியின் கணவர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து இறந்துவிட்டதால் அவருக்கு சேர வேண்டிய இறப்பு பணபயன்களையும் காட்டவில்லை என்பதால் மேற்படி உத்தேச தரப்பினர்களையும் மனுவில் தெரிவித்துள்ள சொத்துக்களையும் அசல் வழக்கில் சேர்க்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.2)எதிர்மனுதாரர்/வாதி இம்மனு சங்கதிகளை மறுத்து அசல்வழக்கு தற்போது உள்ள நிலை குறித்து தெரிவித்து மனுதாரர்கள் தங்கள் மனுவில் வழக்கு சொத்து மாரிமுத்துவுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் எனவும், அதில் அவர் தன் ஆண் வாரிசுகளுக்கு பிரித்து கொடுத்துவிட்டதாக தெரிவித்துள்ளதை முன்னிலைப்படுத்தியும் மனுதாரர்கள் வேண்டியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல எனவும், வாதியின் கணவர் அரசு பணியில் இருந்து இறந்துவிட்டதால் கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை குறித்து வாதி தனியாக நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அதில் பிரதிவாதிகளுக்கு பங்கு இல்லை எனவும், பழனியாண்டிக்கு சொந்தமான வீடு குறித்து இம்மனுவில் சர்வே எண் மற்றும் நான்கெல்லைகள் கூறாமல் உள்ளதால் இம்மனு ஏற்புடையதல்ல என தெரிவிக்கப்பட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிடப்பட்டது.

(5.3)அசல் வழக்கு எதிர்மனுதாரர்/வாதி கடந்த 2022-ம் ஆண்டு தாக்கல் செய்து விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்து A முதல் D அட்டவணை சொத்துக்களாக சொத்து விவரங்கள் காட்டப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்து எழுவினாக்கள் வனையப்பட்டு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு கூடுதல் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக அசல் வழக்கு இருந்த சமயத்தில் இம்மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் தாவா சங்கதிகள் மறுக்கப்பட்டு வாதிக்கு பாகப்பரிகாரம் கிடைக்கக்கூடிய சொத்துக்களில் மட்டும் பாகம் கோராமல் 3,4 பிரதிவாதிகளுக்கு சொந்தமான B, C அட்டவணை சொத்துக்கள் பொறுத்து பாகப்பிரிவினை கோரியுள்ளது சரியல்ல எனவும், தாவா சொத்துக்கள் மாரிமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர் நிர்வாகம்செய்து வந்து வருமானத்தின் அடிப்படையில் சொத்துக்கள் வாங்கப்பட்டது எனவும், தெரிவிக்கப்பட்டும், தாவா சொத்தின் அனுபவம் குறித்தும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு தாவா தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

(5.4)மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பதிலுரையில் உத்தேச தரப்பினர்கள் பற்றியும் மனுவில் குறிப்பிட்டுள்ள விடுபட்டுபோன சொத்து பற்றியும், தெரிவிக்காமல் எதிர்வாதம் செய்து சாட்சிகள் முன்னிலைப்படுத்தியுள்ளனர். தற்போது அசல் வழக்கு இறுதிகட்டத்தில் உள்ள நிலையில் அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் உத்தேச தரப்பினருக்காக 9 நபர்களை புதிதாக சேர்க்க வேண்டும் எனவும், பூங்கோதை என்பவர் 28.03.1990-ம் தேதி பிச்சை வகையறாவுக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்தினையும், சிறுநாவலூரில் உள்ள பழனியாண்டிக்கு சொந்தமான வீட்டையும், சேர்க்க வேண்டும் என இம்மனுவில் தெரிவித்துள்ளதும் இம்மனுவை அனுமதிக்க தெரிவித்துள்ள காரணங்களும் ஏற்புடையதாக இல்லை.

தாவா சொத்துக்களின் தன்மை பற்றியும் வழக்கு சங்கதிகள் பற்றியும் நிரூபணம் செய்ய வேண்டிய கடமை வாதி வசம் உள்ளது. அசல் வழக்கில் முறையான தரப்பினர்களை சேர்த்தும், பாக உரிமை உள்ள அனைத்து சொத்துக்களையும் சேர்த்து பாக வழக்கு தாக்கல் செய்யும் பட்சத்தில் அசல் வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கக்கூடியது. அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் இருந்தாலும் அனைத்து சொத்துக்களையும் சேர்க்காமல் இருந்தாலும் அசல் வழக்கு பகுதி பாகப்பிரிவினையாலும் அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும் பாதிப்படைய வாய்ப்புள்ளது. வாதி இம்மனுவை அனுமதிக்க கடுமையாக ஆட்சேபனை செய்து பதிலுரை தாக்கல் செய்துள்ளார். பதிலுரை சங்கதிகள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்/பிரதிவாதிகள் இம்மனுவில் தெரிவித்துள்ள சங்கதிகளை வாதுரையாக அசல் வழக்கில் தெரிவித்துக்கொள்ளலாம். மனுதாரர்கள் இம்மனுவை மாரியாயி எப்போது இறந்தார் என்பது குறித்து தேதி தெரிவிக்கவில்லை. மேலும் மாரியாயியின் வாரிசுகள் யாரும் சொத்துக்கள் கேட்டு நடவடிக்கை எடுத்ததாக கூறவில்லை. அவர்கள் யாரும் இம்மனுவை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவில் உத்தேச தரப்பினர்களையும் சொத்துக்களையும் சேர்க்க வேண்டும் என தெரிவித்துள்ள காரணங்கள் ஏற்புடையதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

(Sd)/- C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்.</u>** இல்லை.

(Sd)/- C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.